பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 676 **நாள்:13.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களிலும் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் (TNUHDB) குடியிருப்புகளில் 14.11.2026 அன்று சிறப்பு தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களிலும் அமைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் (TNUHDB) குடியிருப்புகளில், பொதுமக்களுக்கு தூய்மையான, பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான வாழ்விடத்தை உறுதி செய்யும் நோக்கில், 14.11.2026 அன்று சிறப்பு தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இச்சிறப்பு தீவிரத் தூய்மைப் பணியின்கீழ், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளில் பின்வரும் பணிகள் விரிவாக மேற்கொள்ளப்பட உள்ளன:

1. குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியுள்ள குப்பைகள் மற்றும் கட்டட இடிபாட்டுக் கழிவுகளை முழுமையாக அகற்றுதல்.
2. குடியிருப்புப் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் மற்றும் வைக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்படாத விளம்பரப் பதாகைகளை அகற்றுதல்.
3. குடியிருப்புகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வளர்ந்துள்ள புற்கள், களைகள் மற்றும் புதர்களை அகற்றி தூய்மைப்படுத்துதல்.
4. குடியிருப்புப் பகுதிகளில் உள்ள பயன்பாடற்ற பொருட்கள் மற்றும் தேவையற்ற கழிவுகளை அகற்றுதல்.
5. பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களில் தேங்கியுள்ள குப்பைகள் மற்றும் கட்டட இடிபாட்டுக் கழிவுகளை அகற்றி தூய்மைப்படுத்துதல்.
6. குடியிருப்புக் கட்டடங்களுக்கு இடையிலான காலியிடங்கள் (In-between Blocks) மற்றும் கட்டடங்களைச் சுற்றியுள்ள காலியிடப் பகுதிகளில் (Setback Areas) தேங்கியுள்ள குப்பைகள் மற்றும் கழிவுகளை முழுமையாக அகற்றுதல்.

இப்பணிகளைத் திறம்பட மேற்கொள்ளத் தேவையான தூய்மைப் பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், வாகனங்கள் மற்றும் இயந்திரங்களைப் போதிய அளவில் பணியில் ஈடுபடுத்திட மண்டல அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளைத் தீவிரமாகக் கண்காணித்து, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப்

பகுதிகளில் தொடர்ந்து தூய்மையைப் பராமரிக்கும் வகையில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இச்சிறப்பு தீவிரத் தூய்மைப் பணிகள் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு முன்கூட்டியே தெரிவித்து, அவர்களின் பங்கேற்பு மற்றும் ஒத்துழைப்பை உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் வசிக்கும் பொதுமக்கள் தங்களது சுற்றுப்புறங்களைத் தூய்மையாகப் பராமரிக்கவும், பொது இடங்களில் குப்பைகளைக் கொட்டுவதைத் தவிர்க்கவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் குப்பை சேகரிப்புப் பணியாளர்களிடம் குப்பைகளை முறையாக ஒப்படைக்கவும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி கேட்டுக்கொள்கிறது.

சென்னை மாநகரின் அனைத்து மக்களுக்கும் தூய்மையான, பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான வாழ்விடத்தை உறுதி செய்வதில் பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்ந்து உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.

GREATER CHENNAI CORPORATION

PRESS RELEASE

PR.No: 676 **Date: 13.11.2026**

The Commissioner of the Greater Chennai Corporation, Dr. G. S. Sameeran, I.A.S., has instructed to conduct a special Mass Cleaning Drive on 14.11.2026 in all the Tamil Nadu Urban Habitat Development Board (TNUHDB) Tenements across Zones 1 to 15, with the objective of ensuring clean, safe and hygienic living conditions for residents.

As part of this special drive, comprehensive cleaning activities will be undertaken in and around all the Tamil Nadu Urban Habitat Development Board (TNUHDB) Tenements, including:

1. Complete removal of accumulated garbage and Construction and Demolition (C&D) waste.
2. Removal of unauthorized posters and banners.
3. Clearance of overgrown grass, weeds and bushes surrounding the tenements.
4. Removal of unwanted materials, unused articles and other waste.
5. Cleaning of parks and playgrounds by removing accumulated garbage and C&D waste.
6. Complete clearance of waste and debris from spaces between residential blocks (In-between Blocks) and setback areas surrounding buildings.

The Zonal Officers have been instructed to mobilize adequate sanitary workers, supervisors, vehicles and necessary machinery to ensure the effective implementation of the cleaning drive. They have also been directed to closely monitor the activities and ensure regular follow-up maintenance to sustain cleanliness in the Tamil Nadu Urban Habitat Development Board (TNUHDB) Tenements areas.

Further, the officials concerned have been instructed to coordinate with the elected representatives and ensure their participation and cooperation in the special cleaning drive.

The Greater Chennai Corporation appeals to residents of the Tamil Nadu Urban Habitat Development Board (TNUHDB) Tenements to extend their full cooperation by keeping their surroundings clean, avoiding littering and handing over waste to Greater Chennai Corporation waste collection personnel.

The Greater Chennai Corporation remains committed to providing clean, safe and hygienic living conditions for all residents of Chennai.

Issued By: Joint Director/Public Relations Officer,
Greater Chennai Corporation.